4. அரசினர் சட்ட முன்வடிவு

தமிழ்நாடு 1971-ம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை-வாடகைக் கட்டுப்பாடு) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு.

திரு. க. இராசாராம் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு 1971-ம் ஆண்டு கட்டிடங்கள் (குத்தகை-வாடகைக் கட்டுப்பாடு) இரண்டாம் திருத்த சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(5) 1971-72-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 12—காவல் துறை (தொடர்ச்சி).

திரு. நா. வீராசாமி : சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை மானியத்தின் மீது எனது கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன்.

காவல்துறை என்று சொல்கின்ற நேரத்திலே இந்த நாட்டில் இருக்கக்கூடிய சட்டம், அமைதி, ஒழுங்கைக் காப்பாற்றக்கூடிய அந்தத் துறைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கோரப் பட்டிருக்கும் தொகையானது உண்மையிலேயே மிகவும் குறை வானது என்று சொல்லும் அளவுக்கு அவர்கள் நல்ல அரும் பணி யினை ஆற்றி வருகிறார்கள். மாம்பலத்தில் ஏற்பட்ட திடீர் பிள்ளையாரிலிருந்து நடைபெறுகின்ற கொலை, கொள்ளை போன்ற காரியங்களைக் கண்காணிக்கின்ற வகையில் தங்கள் உயிரையே தியாகம் செய்யும் அளவில் அவர்கள் செயல்பட்டுக் கொண்டிருக் கிறார்கள்.

சட்டம் ஒழுங்கு இந்தியத் துணைக் கண்டத்திலேயே எந்த அளவுக்குக் காப்பாற்றப்பட்டிருக்கிறது என்று பார்க்கும்போது இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு தமிழகத்திலேதான் அமைதி ஒழுங்கு காப்பாற்றப்பட்டு அமைதியான ஆட்சி, முறையான ஆட்சி நடைபெறுகிறது.

பொதுவாக, துப்பாக்கிச் சூடுகள் நடைபெற்றதைப் பற்றிச் சொன்னார்கள். 1962 ல் இருந்து 1966 வரையில் காங்கிரஸ் ஆட்சி காலத்தில் நடைபெற்ற துப்பாக்கிச் சூடுகளோடு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஏற்பட்ட பிறகு நடைபெற்ற துப்பாக்கிச் சூடுகளைப் பார்த்தால் எண்ணிக்கையில் பாதியாகத் தான் இருக்கிறது.